# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 ஜனவரி மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 09.02.2018–ந் தேதி மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் : 1**

கீழக்கரை நகராட்சி வார்டு மறுவரையறை ஆணையரகத்தால் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல் படி இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள இயற்கை அமைப்பினை கருத்தில் கொண்டும் தெருக்கள் / நகராட்சி பகுதியில் இயல்பான அமைப்பினை கருத்தில் கொண்டும் வார்டு மறுவரையறைக்கான வரைவு கருத்துரு தயாரித்து வரைபடங்கள் படிவங்கள் மற்றும் சான்றுகள் உரிய வழிமுறையாக ஆணையத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு மறுவரையறை ஆணையம் கடித ந.க.எண் 3127/2017/தே.பொ1–2, நாள்.28.12.2017–ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டு பொதுமக்கள் அரசியல் கட்சிகள் பல்வேறு அமைப்புகளிலும் ஆலோசனை மட்டும் ஆட்சேபனைகள் தெரிவிக்க கோரி தினசரி நாளிதழ், நகராட்சி மற்றும் அரசு அலுவலகங்களில் அறிவிப்பு பலகையிலும் வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு விளம்பரம் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து பல்வேறு கருத்துக்களை குறிப்பிட்டு அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை கருத்து இந்நகராட்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களிடமிருந்தும் நேரடியாக / தபால் மூலம் / மின்னஞ்சல் வழியாகவும் 102 மனுக்கள் வரப்பெற்றது. இதனை பரிசீலனை செய்யப்பட்டு மேலாய்வு அலுவலர் அவர்களின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மாவட்ட மறுவரையறை அலுவலர் அவர்களின் உத்திரவிற்கு பின் 102 மனுக்களும் நிராகரிக்கப்பட்டு இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்படி இறுதி வரைவு வார்டு வரையறை கருத்துரு வரையறை ஆணையத்திற்கு உரிய வழிமுறையாக சமர்பிக்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண் 207/2017/அ2)**

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.311** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

கீழக்கரை நகரில் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு கேற்பவும், நகரின் விரிவாக்கத்திற்கு கேற்பவும், இந்நகராட்சியில் தூய்மை இந்தியா பணியினை முழுமையாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு அரசானை(நிலை) எண்.101 நாள். 30.04.1997–ல் குறிப்பிட்டுள்ள அளவுக்கோலின்படி 156 துப்புரவுப் பணியாளர்கள் தேவையாக உள்ளது. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை 32–ல் தற்போது பணியில் 24 துப்புரவுப் பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர்.ஆகையால் இந்த காலிப்பணியிடத்தின் எண்ணிக்கையை ஈடுகட்டும் வகையிலும் அரசானை அளவு கோலின்படி தேவையான 132 துப்புரவுப் பணியாளர் பணியிடத்திற்கு இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட 32 துப்புரவுப் பணியாளர்கள் போக, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்திரவு ந.க.எண்.1528/2012/எச்1 நாள்.14.03.2017–ன்படி தனியார் மூலம் 25 பணியாளர்களை கொண்டு (Out Sourcing) முறையில் துப்புரவுப் பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசாணை(நிலை) எண்.101 நாள்.30.04.1997–ல் குறிப்பிட்டுள்ள அளவுக்கோலின்படி தற்பொழுது 133 துப்புரவுப் பணியாளர்கள் தேவையாக உள்ளது. அளவுகோலின்படியான அனுமதிக்க வேண்டிய 156 துப்புரவுப் பணியிடஙகளுக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட துப்புரவுப் பணியிடஙகள் போக கூடுதலாக 107 துப்புரவு பணியாளர் பணியிடஙகளை மட்டும் இந்நகராட்சி நிதிநிலைமைக்கு ஏற்றவாறு தனியார் மூலம் மீதமுள்ள வார்டுகள் மற்றும் பேருந்து நிலையம் ஆகியவற்றை ஒதுக்கீடு செய்து தனியார் மயமாக்கி (Out Sourcing) துப்புரவு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு ஒப்புதல் பெறுவதற்கு நகர்மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**( கோப்பு எண்.1528/2012/எச்1 )**

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.312** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 3**

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகராட்சியில் உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்டம் 2013–2014 – ஒருஙகிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2013–2014 – மற்றும் மாநில பகிர்வு நிதி 2013–14 ஆகிய மூன்று திட்டஙகளில் ரூ 54.00 லட்சம் மதிப்பீட்டில் ஆறு (6) Universal design toilet கட்டுதல் (தொகுப்பு I) கட்டும் பணிக்கு **(M/s URBANE INDUSTRIES LTD)** நிறுவனம் மூலம் ரூ 53,65,835/–க்கான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி இந்நகர் மன்ற தீர்மான எண் 224 நாள் 03.10.2013–ன் படி ஏற்றுக்கொள்ளப்பட்டு 06.12.2013–ந் தேதி வேலை உத்திரவு வழஙகப்பட்டது. அதனைத் தொடர்ந்து முதற்கட்டமாக 19.06.2014–ந் தேதி சப்ளை செய்யப்பட்ட பொருட்களுக்கு ரூ.13,41,459/– மட்டும் இந்நகராட்சி மூலம் வழஙகப்பட்டது. அதன் பின்பு மேற்கண்ட பொருட்களைக் கொண்டு கழிப்பிடம் நிறுவும் பணிகனை தொடர்ந்து செய்யாமல் இருந்ததால் **(M/s URBANE INDUSTRIES LTD)** நிறுவனத்திற்கு கடிதம் மூலம் அறிவிப்புகள் அனுப்பபட்டும், பல முறை தொலைப் பேசி மூலமாக தெரிவித்தும் மேற்கண்ட நிறுவனத்தில் நேரில் பேசியும் கழிப்பிடம் அமைக்கும் பணியினைச் செய்யாமல் பணி உத்திரவு வழஙகப்பட்டு 4 ஆண்டுகளுக்கு மேலாகியும் மேற்கண்ட பணியை இதுவரை முழுமையாக முடிக்கப்படவில்லை.

மேற்காணும் பணியை துரிதப்படுத்தி முடிக்க வேண்டும் என்று **(M/s URBANE INDUSTRIES LTD)** நேரிடையாகவும், தொலைப் பேசி மற்றும் கடித அறிவிப்பின் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டும் பணி உத்திரவு வழஙகப்பட்டு சுமார் 4 ஆண்டுகள் கடந்த நிலையில் இந்நகராட்சிக்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மேற்காணும் பணிகள் உரிய காலத்திற்குள் முடிக்காததால், ஒப்பந்த நடைமுறை விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பொருட்டு மேற்கண்ட நிறுவனத்திற்கு வழஙகப்பட்டுள்ள பணி உத்திரவினை ரத்து செய்யவும் மேற்கண்ட பணியினை வேறு ஒரு ஒப்பந்தாரர்கள் மூலம் செய்து முடிக்கவும் நகர் மன்றத்தில் ஒப்புதல் பெறுவதற்கும் இந்நகராட்சிப்பொறியாளர்(பொ) அவர்களால் 27.12.2017–ந் தேதி குறிப்பு வழஙகப்பட்டுள்ளது. மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**( கோப்பு எண் 1864/2013/இ1 )**

**அலுவலகக் குறிப்பு:**

**M/s URBANE INDUSTRIES LTD** நிறுவனத்திற்கு வழஙகப்பட்ட பணிஉத்திரவினை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.313** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 4</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் இந்நகராட்சி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்கள் அவ்வப்போது ஆங்காஙகே உடைப்பு ஏற்பட்டு குடிநீர் சாலையில் வீணாக செல்கிறது, இதனால் பொதுமக்களுக்கு குடிநீர் சீராக விநியோகம் செய்வதில் சிராமம் ஏற்படுகிறது. எனவே குடிநீர் தேவை மற்றும் அவசியத்தை கருதில் கொண்டு மேற்காணும் குடிநீர் விநியோகம் செய்யும் குழாய்களை பராமரிப்பு மற்றும் பழுது நீக்க பணிகள் மேற்கொள்ளவதற்கு மதிப்பீடு தொகை ரூ. 4,00,000 /—ஆகும். செலவீனத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் திட்ட நிதியில் மேற்கொள்ளுவதற்கு பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1591—6/ 2018/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் திட்ட நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.4,00,000/— ஐ மேற்கொள்ளும் பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.314</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 5</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் அமைந்துள்ள வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரை தாழ்வான பகுதியில் சேரித்து அங்கிருந்து மின்/ஆயில் மோட்டார் மூலம் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதற்கு மூன்று கழிவுநீரேற்று நிலையஙகள் அமைக்கப்பட்டு கழிவுநீர் குழாய்கள் மூலம் கழிவுநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.இந்த கழிவுநீர் குழாய்களில் அடைப்புகள்/உடைப்புகள் ஏற்படும் பொழுது கழிவு நீர் சாலையில் வழிந்தோடும் நிலை ஏற்படுகிறது. மேற்படி குழாய்களின் உடைப்புகளை சரி செய்யும் பணி செய்வதற்கு மதிப்பீடு தொகை ரூ. 3,75,000 /— செலவீனத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளுவதற்கு பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1591—2/ 2018/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.3,75,000/—ஐ மேற்கொள்ளும் பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.315</u>**அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 6</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருந்து மூன்று கழிவுநீர் மோட்டார் அறைகள் அமைத்து தினமும் கழிவு நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேலும் மாலஙகுண்டு பகுதியில் அமைந்துள்ள குடிநீர் உந்தும் நிலையத்திலிருந்து ஐந்து திறந்த வெளி கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் மின் மோட்டர் மற்றும், சேதுகரை பகுதியில் அமைந்துள்ள குடிநீர் உந்தும் நிலையத்திலிருந்து 10 திறந்த வெளி கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் மின் மோட்டார் மூலம் பொது மக்களுக்கு தினசரி குடிநீர் வழஙகப்பட்டு வருகிறது.இவ்வாறு மின் மோட்டார்களை இயக்கும் பொழுது மின் தடை காரணமாக பழதுகள் ஏற்பட்டும் அதன்

ஒயர்கள் மற்றும் ஸ்டாட்டர்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு மின்மோட்டார் இயங்காத நிலையில் பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே பழுதுகள் ஏற்படும் பொழுது உடனடியாக சரிசெய்ய வேண்டி இருப்பதாலும் உதிரி பாகங்களை உடனடியாக மாற்றி அமைக்கவும் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,50,000/— க்கு ஆகும் செலவீனத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் திட்ட நிதியில் மேற்கொள்ளுவதற்கு பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் திட்ட நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.4,50,000/— மேற்கொள்ளும் பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.316</u>** அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 7</u>

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் (21 வார்டுகளில்) திறந்த வெளி மழை நீர் வடிகால் உள்ளது. மேற்கண்ட வார்டுகளில் அமைக்கப்பட்டுள்ள மேல் மூடிகள் வாகன ஓட்டிகளால் அடிக்கடி சேதம் ஏற்படுத்தப்பட்டு வாறுகால்களின் பக்க சுவர்கள் மற்றும் மேல் மூடிகள் சேதம் ஏற்படுவதால் கழிவுநீர் சாலைகளில் வழிந்தோடுகிறது. மேலும் பள்ளிக்கு செல்லும் பள்ளி சிறுவர்கள் வாறுகால்களில் தவறி விழுந்து விடுகின்றனர். எனவே திறந்த வெளி மழை நீர் வடிகால்களின் பக்க சுவர்களை சரி செய்வதற்கும்,புதிதாக மேல் மூடிகள் அமைக்கும் பணி செய்வதற்கு மதிப்பீடு தொகை ரூ. 3,75,000 /— ஆகும் இச்செலவீனத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளுவதற்கு பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
<u>(கோப்பு எண்.159(1—7)/இ1/2018)</u>

<u>அலுவலக குறிப்பு</u>

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.3,75,000/— ஐ மேற்கொள்ளும் பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.317</u>** அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 8</u>

கீழக்கரை நகராட்சி 21—வது வார்டு தட்டான் தோப்பு பகுதியில் அமைந்துள்ள கழிவு நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோர்கள் மூலம் கழிவு நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேற்படி கழிவுநீர் உந்து நியைத்தில் 15 KVA ஜெனரேட் புதிதாக பொருத்தப்பட்டு இயங்கி வருகிறது. மேற்படி 15 KVA ஜெனரேட் கழிவு நீரேற்று நிலையத்தின் மோட்டார் அறை அருகில் வெளிப்புறத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் மழை காலங்களில் ஜெனரேட்டர் உட்புறம் மழைநீர் சென்று பழுது ஏற்பட்டு ஜெனரேட்ரை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. எனவே கான்கீரிட் திட்டு அமைத்து மழைநீர் படாத வண்ணம் மேற்கூரை அமைக்கும் பணிகள் செய்வதற்கு மதிப்பீடு தொகை ரூ. 1,50,000 /— ஆகும். செலவீனத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளுவதற்கு பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1591–3/ 2018/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.1,50,000/–ஐ மேற்கொள்ளும் பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.318</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 9</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 02.11.2017 அன்று மாவட்ட ஆட்சி தலைவர் இராமநாதபுரம் அவர்களால் ஆய்வு செய்யப்பட்ட போது, நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடம், அம்மா உணவகம் , ஆடு வதை செய்யும் கூடம், பேருந்து நிலையம் மற்றும் குடிநீர் ஏற்று நிலையம் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்காணும் அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைக்கும் பணி செய்வதற்கு மதிப்பீடு தொகை ரூ. 1,50,000/– ஆகும். செலவீனத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளுவதற்கு பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1591–4/ 2018/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.1,50,000/–ஐ மேற்கொள்ளும் பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.319</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 10</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 16–வது வார்டு புதுகுடி மற்றும் 4–வது வார்டு நான்கு பங்களா பகுதியில் அமைத்துள்ள கழிவுநீர் உந்து நிலையத்துள்ள மோட்டர்கள் மூலம் கழிவுநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அப்பகுதியில் கட்டப்பட்டுள்ள கழிவுநீர் சேகரிப்பு தொட்டிக்கு போதிய மேல் மூடி இல்லாமல் திறந்த நிலையில் உள்ளது.இந்நிலையில் அப்பகுதியில் அமைந்துள்ள வீடுகளில் வளக்கப்படும் ஆடுகள் மேற்படி கழிவுநீர் தொட்டிகளில் அடிக்கடி விழுந்து விடுகின்றன. எனவே மேற்படி கழிவுநீர் சேகரிப்புத் தொட்டிகளுக்கு புதிதாக மேல் மூடி அமைக்க தொகை ரூ.50,000/– ஆகும் செலவீனத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளுவதற்கு பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1591–5/ 2018/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.50,000/—ஐ மேற்கொள்ளும் பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.320** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 11**

இராமநாதபுரம் மாவட்டத்தில் 25.11.2017—ந் தேதி பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா நடைபெறும் நிகழ்ச்சிக்கு வருகை தரும் மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் ஆகியோரை இந்நகராட்சி சார்பில் வரவேற்பு செய்யும் பொருட்டு தினபூமி நாளிதழிலில் வரவேற்பு மலர் வெளியிட்ட வகைக்கு கட்டணம் ரூ.15,750/—க்கு பட்டியல் எண். 61105 நாள்.25.11.2017—ன் படியானது இந்நகராட்சிக்கு 18.12.2017—ம் தேதி வரப்பெற்றுள்ளது மேற்படி பட்டியல் ரூ.15,750/— மட்டும் வழஙகுவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

தினபூமி நாளிதழில் விளம்பர கட்டணம் ரூ.15,750/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.321** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 12**

இராமநாதபுரம் மாவட்டத்தில் 25.11.2017—ந் தேதி பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா நடைபெறும் நிகழ்ச்சிக்கு வருகை தரும் மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் ஆகியோரை இந்நகராட்சி சார்பில் வரவேற்பு செய்யும் பொருட்டு தினகரன் நாளிதழிலில் வரவேற்பு மலர் வெளியிட்ட வகைக்கு (Wintech Agency) கட்டணம் ரூ.21,000/—க்கு பட்டியல் எண். 049 நாள்.25.11.2017—ன் படியானது இந்நகராட்சிக்கு 30.01.2018—ம் தேதி வரப்பெற்றுள்ளது மேற்படி பட்டியல் ரூ.21,000/— மட்டும் வழஙகுவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

தினகரன் நாளிதழில் (Win tech Agency) விளம்பர கட்டணம் ரூ.21,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.322** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 13**

இந்நகராட்சி, அலுவலக கட்டிட வளாகத்தில் செயல்பட்டு வரும் வாட்டாச்சியர் அலுவலகத்திற்கு சூரிய மின்சக்தி கலன் (மின்கலன் இல்லாமல்) ONGRID METER பொருத்துவதற்கான மதிப்பீட்டுக் கட்டணம் ரூ.14,175/—ஐ செலுத்துமாறு கீழக்கரை உதவி மின்பொறியாளர்(நகர்) TANGEDCO/2018 Dt.31.01.2018—ம் தேதிய பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டு கட்டணம் ரூ.14,175/—ஐ மட்டும் செலுத்துவதற்கு அனுமதி வேண்டி மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.14,175—ஐ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**__தீர்மானம் எண்.323__** அனுமதிக்கப்பட்டது.

__பொருள் : 14__

இந்நகராட்சியில் கழிவு நீர் வடிகால்களின் மொத்த நீளம் 10 கீமி உள்ளது. தற்சமயம் இங்கு அமைத்துள்ள அனைத்து கழிவுநீர் மற்றும் மழைநீர் வடிகால்காலும் அடைப்பும் ஏற்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சி கடற்கரை அருகில் அமைத்துள்ளதால் தெருக்களில் மணல்கள் அதிகமாக காணப்படுகிறது. அம்மணல்கள் கழிவுநீர் வாறுகால் மற்றும் மழைநீர் வடிகால்களில் படர்ந்து கழிவுநீர்கள் அடிக்கடி தெருக்களில் ஓடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும் கழிவுநீர் சம்மந்தமாக பல புகார்கள் பொதுமக்களிடமிருந்து வந்த வண்ணம் உள்ளது. எனவே பொதுசுகாதார அவசர அவசியம் கருதி கழிவுநீர் கால்வாய்களை மண்தூர்வாரி அகற்றப்பட வேண்டும் தற்சமயம் இந்நகராட்சியில் 49 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். அவர்களை கொண்டு அன்றாடம் குப்பைகளை பிரித்து சேகரிக்கும் பணிகள் பார்க்கப்படுகிறது எனவே தற்சமயம் 107 பணியாளர்கள் காலிப்பணியிங்கள் உள்ளன எனவே கால்வாய்கள் தூர்வாறும் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது எனவே தற்சமயம் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி அனைத்த கழிவு மற்றும் மழைநீர் கால்வாய்கள் தனியார் பணியாளர்களை (Out Souring) மூலமாக நியமனம் செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் கூலி வழஙகி கழிவு கால்வாய்களை தனியார்மயம் மூலம் அகற்றலாம் என துப்புரவு ஆய்வாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு மதிப்பீடு தொகை ரூ. 2,80,000 /– ஆகும். செலவீனத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளுவதற்கு பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

__அலுவலக குறிப்பு__

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனஙகள் ரூ.2,80,000/–ஐ மேற்கொள்ளும் பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்

**__தீர்மானம் எண்.324__** அனுமதிக்கப்பட்டது.

**தனிஅலுவலர் மற்றும்**
**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி**